**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 301/2020

Prosecution witness for P.W.13

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. கனகவள்ளி | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2024.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் தட்டச்சராக பணியில் இருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன மாரியப்பன் எனக்கு மாமா முறை. ஆஜர் எதிரிகளை தெரியும். 30.12.2019 அன்று தேர்தல் சமயத்தில் என் தகப்பனார் பச்சைபெருமாள், என் தம்பி ஜெயமுருகன் ஆகியோர் மேட்டுரில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் வெட்டு கிடப்பதாக எங்கள் தெருவில் பேசிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் வெளியில் வந்து பார்க்கும்போது என் தகப்பனாரும் தம்பியும் வெட்டுபட்டு கிடப்பதாக சொன்னார்கள். அதைக் கேள்விப்பட்டு நானும் அ.சா.8 மற்றும் அ.சா.9 ம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு சென்றோம். பள்ளிக்கு தென்புறமாக ஒரு ஓடை உள்ளது. அங்கு என் தகப்பனாரும் தம்பியும் ரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். நானும் அ.சா.8 மற்றும் அ.சா.9 ம் அவர்களை தூக்க சென்ற போது ஆஜர் எதிரிகள் எங்களையும் தாக்க வந்தார்கள். போலீசா அங்கு வந்து விட்டார்கள். 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு தாமதம் ஆகும் என்பதால் அந்த வழியாக சுமோ காரில் என் தகப்பனாரையும் தம்பியையும் நாங்கள் ஏற்றி ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். நாங்கள் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாகவே மருத்துவமனை நுழைவாயிலில் ஆஜர் எதிரிகள் நின்று கொண்டுமருத்துவமனைக்குள் வந்து நாங்கள் காரில் இருந்து இறங்க முயற்சிக்கும்போது ஆஜர் எதிரிகள் எங்கள் தாக்க வந்தார்கள்.

அதனால் என் தகப்பனாரையும் தம்பியையும் காரிலிருந்து இறக்க முடியவில்லை. அப்போது என் மாமா மாரியப்பன் மருத்துவமனைக்குள் வரும்போது ஆஜர் எதிரிகள் இவனையும் சேர்ந்து வெட்ட வேண்டும் என்று சொல்லி ஆஜர் எதிரிகள் அரிவாள் கம்புடன் மேற்படி மாரியப்பனை விரட்டி சென்றார்கள். அங்கிருந்தால் எங்கள் உயிருக்கு ஆபத்து என்று போலீசார் சொன்னதால் என் தகப்பனாரையும் தம்பியையும் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து விட்டோம். என் தகப்பனாருக்கு சுயநினைவு இல்லை. தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் இருக்கும்போது எங்களுக்கு போலீசார் மூலம் என் மாமா மாரியப்பன் கொல்லப்பட்டு விட்டதாக தெரியும். மேற்படி தேர்தலில் போட்டியிட்ட இளையராஜா என்பவருக்கு என் தகப்பனார் பிரச்சாரம் செய்ததால், மேற்படி இளையராஜாவுக்கு எதிராக 1ம் எதிரியின் மனைவி போட்டியிட்டதால், என் தகப்பனாரை ஏன் வெளியூர்காரர்களுக்கு பிரச்சாரம் செய்தீர்கள் என்று முன்விரோதம் கொண்டிருந்தார்கள். 30.01.2020 அன்று கோவில்பட்டி குற்றவியல் நடுவர் முன்பாக நான் கு.வி.மு.ச. 164 பிரிவின்கீழ் வாக்குமூலம் அளித்தேன். நான் மேற்சொன்ன சங்கதிகளைத்தான் மேற்படி வாக்குமூலத்திலும் சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

04.01.2020 அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார். என் தகப்பனார் காயம் பட்டதற்காக எதிரிகள் மீது ஒரு கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கிலும் 04.01.2020 அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார். போலீசார் விசாரணையில் இருதரப்பினரும் மாறிமாறி தாக்கிக் கொண்டு காயம் பட்டிருப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் என் தகப்பனாரும் தம்பியும் ரத்த வெள்ளத்தில் இருந்தபோது உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் அவர்களையும் எங்களையும் கூட்டிச் சென்று தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லவில்லை. காயம்பட்ட என் தகப்பனாரையும் தம்பியையும் தொட்டு தூக்கி வாகனத்தில் ஏற்றுவதற்கு நாங்கள் உதவி செய்தோம். அப்போது எங்கள்

உடைகளில் ரத்தம் பட்டது. ரத்தம் பட்டஉடைகளை போலீசார் எங்களிடமிருந்து கேட்டு வாங்கிக் கொள்ளவில்லை. நான் சொன்ன நேரத்திலும் சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், அதனால்தான் எங்கள் உடைகளில் ரத்தம் படவில்லை என்றும் போலீசாரும் அதை கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் தவறு. என் தம்பி ஜெயமுருகன் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நாங்கள் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், அங்கு எதிரிகள் எங்களை தாக்கியதாகவும் அங்கிருந்து என் தகப்பனாரையும் தம்பியையும் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாகவும், ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையில் ஆஜர் எதிரிகள் என் மாமாவை விரட்டிச் சென்றதாகவும் அன்று இரவு 9.30 மணியளவில் என் மாமா கொல்லப்பட்டு விட்டதாக போலீசார் மூலம் எங்களுக்கு தகவல் கிடைத்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொன்னேன். 6.15 மணியளவில் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சொல்லிக் கொடுத்ததற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தேர்தலில் மேற்படி இளையராஜா வெற்றி பெற்றார். இளையராஜா தரப்பிற்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் பார்க்காத சங்கதிகளை பார்த்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2024.12.18 19:40:44 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 301/2020

Prosecution witness for P.W.14

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சண்முகராஜ் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2024.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஓட்டப்பிடாரம், மேட்டுரில் குடியிருந்து நில தரகராக தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மாரியப்பனை தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் என் உறவினர்கள். இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 30.12.2019 அன்று நடந்த தேர்தல் வாக்குப்பதிவு அன்று மாலை 4.45 மணியளவில் மாரியப்பன் மற்றும் பச்சைபெருமாள், ஜெயமுருகன் ஆகிய இளையராஜா என்ற வேட்பாளரின் ஆதரவாளர்களாக செயல்பட்டதால் இளையராஜாவின் எதிர்வேட்பாளரான 1ம் எதிரியின் மனைவிக்கு ஆதரவாக மேற்படி மாரியப்பன், பச்சைபெருமாள், ஜெயமுருகன் ஆகியோர் செயல்படவில்லை என்பதால் முன் விரோதம் கொண்டு மேட்டுர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகில் மேற்படி பச்சைபெருமாள், ஜெயமுருகன் ஆகியோரை ஆஜர் எதிரிகள்

தாக்கியதாகவும் அதில் பச்சைபெருமாள் மற்றும் ஜெயமுருகன் ஆகியோர் கொடுங்காயம் அடைந்ததால் அவர்களை அ.சா.8 மற்றும் அ.சா.9 மற்றும் அ.சா.13 ஆகியோர் டாடா சுமோவில் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அவர்களைப் பார்க்க வந்த மேற்படி மாரியப்பனை அங்கு ஏற்கனவே காத்துக் கொண்டிருந்த ஆஜர் எதிரிகள் மருத்துவமனையிலிருந்து விரட்டிச் சென்று அவர்கள் அவரை கொலை செய்து விட்டதாகவும், போலீசார் பிரேத விசாரணை செய்யும்போது 31.12.2019 அன்று அதிகாலை 4.00 மணியளவில் நானும் உடனிருந்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும் தற்போது எதிரிகள் என் உறவினர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2024.12.18 19:40:51 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 301/2020

Prosecution witness for P.W.15

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கருப்பசாமி | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.12.2024.

முதல் விசாரணை

நான் தற்போது பசுவந்தனை கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 01.01.2020 அன்று ஓட்டப்பிடாரம் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது, காலை 9.00 மணியளவில் ஓட்டப்பிடாரம் ஆய்வாளர் எனக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு மாரியப்பன் கொலை வழக்கில் நான்கு நபர்களை கைது செய்து வைத்திருப்பதாகவும், அந்த இடத்திற்கு வரவேண்டும் என்றும் சொன்னதன் பேரில் நானும், என் உதவியாளர் மணியும் மேலமீனாட்சிபுரம் சித்திவிநாயகர் கோவில் அருகில் சென்றபோது, ஏற்கனவே போலீசார் கைது செய்து வைத்திருந்த 3, 4, 6, 7 ஆகிய எதிரிகளை எங்கள் முன்பாக விசாரித்தபோது, மேற்படி எதிரிகள் தாங்களாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். 4ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4.** 3ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டபகுதி **அ.சா.ஆ.5.** 6ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டபகுதி **அ.சா.ஆ.6. 7**ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டபகுதி **அ.சா.ஆ.7.** மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் மேற்படி எதிரிகள் திருநெல்வேலி சாலையில் வடக்கு பரும்பூர் அழைத்துச் சென்று வ.உ.சி. அரசு பள்ளி அருகில் இருந்த முட்புதரிலிருந்து மூன்று அருவாள்கள், ஒரு கம்பு ஆகியவற்றை எங்கள்

முன்னிலையில் ஆஜர் செய்தார்கள். மேற்படி அருவாள்கள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1 முதல் சா.பொ.3. சாட்சி மீண்டும் மேற்படி எதிரிகள் இரண்டு கம்புகளை எடுத்துகொடுத்ததாக மாற்றிக் கூறுகிறார். மேற்படி வழக்கு சொத்துக்களை போலீசார் எங்கள் முன்பாக கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த மகஜர் **அ.சா.ஆ.8.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் ஒரு வருடமாக ஓட்டப்பிடாரம் கிராம நிர்வாக அலுவலராகப் பணியில் இருந்தேன். இளையராஜா என்பவரை எனக்கு தெரியும். அவர் ஆளுங்கட்சி சார்பாக உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் சரிதான். போலீசார் மேற்படி எதிரிகளை நான் செல்வதற்கு முன்பாக எவ்வளவு நேரமாக பிடித்து வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் மேற்படி எதிரிகளுக்கு ஆசை வார்த்தை சொல்லி அங்கு வைத்திருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மேலமீனாட்சிபுரம் பேருந்து நிறுத்தத்தில் மேற்படி எதிரிகளை போலீசார் கைது செய்து வைத்திருந்தார்கள். பேருந்து நிறுத்தம் என்பது அனைவரும் வந்து செல்லும் பொதுவான இடம் என்றால் சரிதான். அன்றைய தேதி புதுவருடம் என்பதால் பேருந்து நிறுத்தத்தில் அதிகமாக கூட்டம் இருந்தது என்றால் அங்கு கூட்டம் இல்லை. நாங்கள் போகும்போது அங்கு யாரும் இல்லை. பேருந்து நிறுத்தத்தில் டீக்கடை இல்லை. போலீஸ் விசாரணையில் நாங்கள் பள்ளிக்கூடம் அருகில் சென்றதாகவும், மேற்படி வழக்கு சொத்துக்களை முட்புதரிலிருந்து மேற்படி எதிரிகள் எடுத்துக் கொடுத்ததாகவும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அருவாள் மற்றும் கம்பு வீட்டுக்கு வீடு பொதுவாக கிடைக்கக்கூடிய ஒன்று என்றால் சரிதான். நான் மேற்படி இளையராஜாவிற்கு வேண்டிய நபர் என்பதால் பார்க்காத சம்பவத்தைப் பார்த்ததாக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டுவிட்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பேருந்து நிறுத்தம் அருகில் வீடுகள் உள்ளன.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2024.12.18 19:41:03 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.